மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தா மருத்துவமனை ஆரம்பச் சுகாதார நிலையத்தோடு இணைந்து இருக்கவேண்டுமேயொழிய தனித்தனியாக அமைப்பது என்பது கடினம். எனவே ஆரம்பச் சுகாதார நிலையத்தோடோ அல்லது தாலுக்கா மருத்துவமனையோடோதான் இதையும் இணைத்து வைக்கமுடியும். எனவே, தனியாக வைப்பது கடினம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் *326*, திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

326—

சித்தர்க்காடு நவீன அரிசி ஆலை.

16784* **திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி சித்தார்க்காடு நவீன அரிசி ஆலையினால் சுற்றுப்புறத் தூய்மை கெடுவது அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பொதுமக்கள் நலன் கருதி சுற்றுப்புறத் தூய்மை பாதுகாக்க எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) சித்தர்க்காட்டில் அமைந்துள்ள நுகர்பொருள் வாணிபக் கழகத்தைச் சேர்ந்த நவீன அரிசி ஆலையில் தூசு வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்த தூசு பிரிப்பான்கள் பொருத்தப்பட்டுள்ளன. செயல்முறைக் கழிவு நீரினை சுத்திகரிக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும், காற்று மாசு தடுப்புச் சாதனங்களை சரியான முறையில் இயக்கவும் இந்தத் தொழிற்சாலை நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் முனைப்பாகக் கண்காணித்து வருகின்றது.

முற்பகல் 10-20

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் உள்ள சித்தர்க்காடு நவீன அரிசி ஆலையிலிருந்து வரும் புகையில் உமி கருப்பாக மாறி அந்தத் தூசி

1993 ஏப்ரல் 13]

அந்தப்பகுதியில் வசிக்கும் சுமார் ஆயிரம் பொது மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. அவர்கள் உணவு அருந்தும்போதும், துணிகளை உலர்த்தும்போதும் அவற்றில் தூசி படிந்து ஈஸ்னோபீலியா, காசநோய் போன்ற நோய்கள் பரவுகின்றன. அதனால் சுகாதாரக் கேடுகளும் வருகின்றன. அதனைத் தடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த ஆலையின் நிர்வாகத்திற்கு இதுபற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் நடவடிக்கை எடுப்பதாக ஒப்புதல் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களும் இதுபற்றி நானும் கவனிக்கிறேன் என்று இங்கே என்னிடம் தெரிவித்திருக்கிறார்கள். எனவே அதன்மீது நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்துகொண்டிருக்கிறது.

திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிகமாக வியாதிகள் அங்கே பரவுவதால் இந்த சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள் உடனடியாக நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டம் முடிவதற்குள் நடவடிக்கை எடுப்பது என்பது அவ்வளவு வேகமாக அதைச் செய்யமுடியாது. அவர்களுக்கு ஒரு கால அவகாசம் நாம் கொடுக்கிறோம். அந்தக் கால அவகாசத்திற்குள் அவர்கள் அதைச் செய்கிறார்களா என்பதைத்தான் நாம் பார்க்கிறோம். ஏற்கெனவே அங்கே அமைத்திருக்கிற அந்தச் சாதனங்களை ஒழுங்கு படுத்துவதற்காக, அதைப் பழுது பார்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அதுபோக புதிதாகப் பல சாதனங்களை அமைக்க வேண்டுமென்ற யோசனையையும் மாசு கட்டுப்பாட்டு வாரியம் கொடுத்திருக்கிறது. சம்பந்தப்பட்ட துறையும் அதற்கு ஒப்புதலைத் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரிடத்திலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நிச்சயமாக விரைவாக நடவடிக்கை எடுக்கலாமே ஒழிய சட்டமன்றம் முடிவதற்குள் நடவடிக்கை எடுக்க முடியும் என்று சொல்லமுடியாது. எனவே விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 327, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. கே. செல்வராஜ், கேட்கிறார் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.